www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுங்கள்!

# பொதிகை வெளியீட்டினருக்கு நிதியுதவிபுரியுங்கள்!

தமிழீழ விடுதலைப் போராட்டம் பலத்த பின்னடைவுகளையும்,
நம்பிக்கையீனங்களையும், ஏகாதிபத்தியங்களின் சதிவலைகளை
-யும் சந்தித்துக் கொண்டிருக்கும் காலமிது. இதற்கான
அடிப்படைகளை ஆராய்ந்து பின்னேக்கிய பயணங்களை
அழித்தொழித்து, முன்னேக்கிய - அஞ்சாமை மிக்க - விட்டுக்
கொடுப்புகளற்ற - அனைத்து மக்களுக்குமான விடுதலையை
உறுதி செய்யும் பாதையில் போராட்டத்தை வழிநடத்த
உதவுவது விடுதலையின் பால் அக்கறை கொண்ட அனைவரினதும்
கட்டாய கடமையாகும்.

இவ்வாறான நோக்கில் வெளியீட்டுத் துறை சார்ந்த பணிகளை
முன்னெடுப்பதற்காக விடுதலையின் பால் அக்கறை கொண்ட
ஒரு சில இளைஞர்களால் சென்னையில் ஆரம்பிக்கப் பட்டதே
பொதிகை வெளியீடு. சர்வதேச விடுதலைப் போராட்டங்கள்
பற்றிய ஆய்வு நூல்களைத் தமிழில் தருவதும், எமது நாட்டின்
சமூக விஞ்ஞான - அரசியல் ஆய்வுகளையும், கலை.இலக்கிய
பண்பாட்டுத் துறை நூல்களையும் வெளிக் கொணருவதே
எமது எண்ணம்.

'இனி வரும் காலம்' எமது கன்னி முயற்சி. '(வியற்னாம்)
ஆகஸ்ட் புரட்சியின் வரலாறு' என்ற தமிழ் மொழிபெயர்ப்பை
நாம் அடுத்ததாக வெளியிட எண்ணியுள்ளோம். இவ்வாறான
முயற்சிகளுக்கான நிதிப் பிரச்சனைகள் பற்றி நாங்கள் சொல்லிக்
கொண்டிருக்கத் தேவையில்லை. எமது போராட்டத்தில் அக்கறை
கொண்ட அனைவரும் அறிவர்.

எமது முயற்சிகளுக்கு உங்களிடமிருந்து நிதியுதவியை
எதிர்பார்க்கிறோம்!

தோழமையுடன்
'பொதிகை'
சென்னை-